முருகப்பெருமான் துணை

**மகான் குருதட்சணாமூர்த்தி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.01.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுக ஞான வள்ளலே
அறமாக பேருலகை மாற்ற
ஆறுமுகனார் அவதாரமாக வந்த
அரங்கமகா ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது கலை திங்கள்
அறிவிக்க சப்தமதிகதி கதிர் வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 07 ம் நாள், 21.01.2024, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் குருதட்சணாமூர்த்தி யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
பாரதமெங்கிலும் தருமநெறி
பழுதின்றி சக்தியாகப் பெருக வேண்டி
4. வேண்டியே தரும சாலைகள்தனை
வையகம் எங்கிலும் கிளைகளை
உண்டாக்கி தருமம் வளர்க்கின்ற
உயர் சேவை ஆற்றி வருக
5. வருகவே அரங்கமகான் காட்டும்
வல்லமையான சன்மார்க்க சங்கம்
தருமமுடன் ஜீவ தயவை வளர்க்கும்
தன்னிகரில்லா அமைப்பாக பெருகி வர
6. வருகவே உலகை ஆளுகின்ற
வல்லமையான ஞானத் தலைமையை
தருகின்ற ஆன்மீக அரசியல் களம்
தக்கபடி அமைக்கும் சக்தியாக

7. சக்தியாக அரங்கன் தொண்டர்படை
சகலதிக்கிலும் பெருகி நிற்க
சக்திமிகு ஞான சமூகமும்
சற்குரு அரங்கனால் உருவாகும்
8. ஆகவே கலியுக மக்களும்
அரங்கன் வாழ் பிரணவக்குடிலை
வகைபட நாடிவந்து அனுகி
வரம் தரும் தீட்சை பெற்று வணங்க
9. வணங்கவே அரங்கன் ஆசியால்
வழிகாட்டலால் மக்களிடை தேற்றம்
இணங்கி குருவருள் பலமாக
எல்லாம் மகா சக்தி வடிவாக
10. ஆகவே ஆற்றல் பெருகி
அநீதி ஆபத்தான சக்திகளுக்கு
வகைபட தவிர்க்கும் வண்ணம்
வாய்மை சேவை வளர்க்கும் வண்ணம்
11. வண்ணமுடன் உயர்வு கண்டு
வையகம் ஞானவான்கள் தலைமை
நன்னயமாய் அடைய தேற்றம்
நானிலமே கண்டு சிறக்கும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–